ளடு

**வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அவர்களின் செயல்முறைகள்**

**ந.க. எண்.4978/ஆ5/ 2024 நாள்.09/12/2024**

பொருள் : பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து J-PAL Soutth Asia நடத்தும், " Identifying and Nurturing Math Talent at Scale" நடத்துதல் – சார்பாக

பார்வை :

1. அரசாணை நிலை எண். 81, திட்டமிடல் மற்றும் மேம்பாடு (P&D) துறை நாள்: 19.11.2014
2. அரசாணை நிலை எண்.167, திட்டமிடல் மற்றும் மேம்பாடு (P&D) துறை நாள்: 30.11.2023
3. அரசாணை நிலை எண். 157, திட்டமில் மற்றம் மேம்பாடு (P&D) துறை நாள்: 19.11.2024

***************

பார்வை 3–ல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி, "J–PAL South Asia" ஆதாரங்களின் அடிப்படையில் அரசுத் திட்டங்களை முண்னெடுக்கும் முயற்சியில் தமிழ்நாடு அரசுடன் இணைந்து, J–PAL "Identifying and Nurturing Math Talent at Scale" என்றதலைப்பில் ஒரு ஆய்வை மேற்கொண்டு வருகிறது.

இந்த ஆய்வின் முக்கிய நோக்கம், கணிதத்தில் திறமையான மாணவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு Art of Problem Solving (AoPS) என்ற ஒரு ஆன்லைன் தளத்தில் கணிதப் பாடங்கள் வழங்குவதும், அது அவர்களுக்கு எவ்வளவு உதவியாக இருக்கிறது என்பதை அறிந்துகொள்வதுமே ஆகும். இந்த ஆன்லைன் வகுப்பை பயன்படுத்தும் போது மாணவர்கள் உலகத்தரம் வாய்ந்த கற்றல் முறைகளை இலவசமாகவும், தங்கள் திறமைகளை மேம்படுத்துவதற்கும், வெளிப்படுத்துவதற்கும் வாய்ப்பை பெற முடியும். மேலும் கணித பாடத்தை எளிமையான முறையில் கற்றுக்கொள்ளவும் உதவும்.

J–PAL களக்குழுவினர் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு உயர்நிலை, மேல்நிலை, நடுநிலை பள்ளி மாணர்களுக்கு AoPS–ன் செய்முறை புத்தகத்தை வழங்கி 4 வார முடிவில் ஆன்லைன் வினாடி வினாவில் கலந்து கொள்வது பற்றி விவரித்திருந்தனர். மாணவர்களும் சிறப்பாக கலந்து கொண்டு வருகின்றனர். தற்போது அடுத்த கட்டமாக ஆன்லைன் தேர்வில் கலந்துகொண்டு, சிறப்பாக பங்குபெற்று தேர்வாகும் மாணவர்களுக்கு AoPS அணுகல் வழங்குவதற்கும், மாணவர்கள் ஆன்லைன் போர்ட்டலில் கலந்து கொள்ள இணையத்துடன் கூடிய டேப்லெட் வழங்குவதற்கும் J–PAL களக்குழுவினர் பள்ளிக்கு வருகை புரிவார்கள்.

**<u>தலைமையாசிரியர்கள் கவனத்திற்கு :</u>**

- ⇨ தேர்வான மாணவர்களுக்கு AoPS அணுகல் (User Name, Password) Create செய்து கொடுத்தல்.
- ⇨ AoPS–இன் அனைத்து பாட தொகுப்பும் அடங்கிய புத்தகம் வழங்கப்படும்.
- ⇨ இணைய இணைப்புடன் டேப்லெட் இலவசமாக வழங்குதல் (ஜூலை 2025 மாதம் வரை) ஆன்லைன் வகுப்பில் கலந்து கொள்ள வழங்கப்படும்.
- ⇨ தலைமையாசிரியர்கள் பெற்றோர்களை பள்ளிக்கு வரவழைக்க தகவல் கொடுக்க வேண்டும்.

- ⇨ விடுமுறை நாட்களில் மாணவர்களின் பங்களிப்பு அதிகமாக இருப்பதால் விடுமுறை நாட்களிலும் களக்குழுவினர் மாணவர்களை சந்தித்து பின்பற்றுவார்கள்.
- ⇨ களக்குழுவினர் இவர்களை தொடர்ந்து கண்காணிக்க பள்ளிக்கு வருகை புரிவார்கள்.

இந்த திட்டம் முழுமையாக செயல்படுத்த தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒத்துழைப்பு வழங்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இணைப்பு –

தேர்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர்பட்டியல்

9/12/24

முதன்மை கல்வி அலுவலர்,
வேலூர்.

09.12.24

பெறுநர்:
சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–
மாவட்டக் கல்வி அலுவலர்,
(இடைநிலை / தொடக்கக் கல்வி)
வேலூர் மாவட்டம்.